**சுருக்கம்**

பள்ளிக்கல்வி-2005-2006ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம்-50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 75 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கற்பிப்பு துணைக்கருவிகள் வாங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (இ2) துறை**

அரசு ஆணை (நிலை) எண். 81,
நாள் 16.5.2005

படிக்கப்பட்டவை:

இயக்குநர், பாள்ளிக்கல்வித்துறை, சென்னை கடிதம்
ந.க.எண்.94479/பிடி1/2004 நாள் 6.1.2005.

*****

ஆணை:

வகுப்புகளில் கற்பிக்கும்போது, ஆசிரியர்கள் அதற்குப் பொருத்தமான உரிய கருவிகளை பயன்படுத்தி கற்பித்தால் எந்த பாடத்தையும் எளிமையாக ஆசிரியர்களால் கற்பிக்க இயலும், பள்ளி அறையில் அப்படி கற்பிக்கும்போது கற்பிப்பதற்கு உதவியான கருவிகள் மற்றும் உபகரணங்கள் மாணவர்களை அவர்கள் கற்கும் பாடங்களில் ஈடுபடச் செய்யும் என்பது இங்கே குறிப்பிடத் தேவையில்லை. கற்பிக்க உதவும் கருவிகள் மற்றும் உபகரணங்கள் பல மேல்நிலைப் பள்ளிகளில் இல்லை. எல்லா பாடங்களிலும் நல்ல முறையில் மாணவர்களுக்கு கற்பிப்பு திறனை மேம்படுத்த அத்தகைய உபகரணங்களை கொண்டு கற்பிக்க ஏற்பாடு செய்வது தற்போது உகந்த தருணம் ஆகும். இக்குறிக்கோளினை அடைவதற்கு 2005-2006ம் ஆண்டில் 50 அரசு உயர்நிலை மற்றும் 75 அரசு மேல்நிலை பள்ளிகளுக்கு உடனடியாக அத்தகைய கற்பிப்பு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். இதற்கு ஆகும் செலவு ரூபாய்.30 இலட்சங்களாகும். எனவே, ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு 2005-2006 ஆண்டின் பகுதி-II திட்டத்தின் கீழ் வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலே பத்தி-1இல் உள்ள பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்து, 2005-2006ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ், 50 அரசு உயர்நிலை

பள்ளிகள் மற்றும் 75 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கற்பிப்பு துணைக்கருவிகள் வாங்குவதற்கு ரூ.30,00,000/- (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) தொடராச் செலவினம் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இத்திட்டத்திற்கான செலவினத்தை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கலாம்:

2202-பொதுக்கல்வி-02 இடைநிலைக்கல்வி 109 அரசு இடைநிலைப்பள்ளிகள்-பத்தாவது ஐந்தாண்டுத்திட்டம் II மாநிலத்திட்டம் -JZ உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு கற்பிப்பு உபகரணங்கள் வழங்குதல் 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் (த.தொ.கு.2202-02-109 JZ 1911)

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.22106/Edn-II/2005, நாள் 25.4.2005ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை 6.
மாநிலக்கணக்காயர், சென்னை 18.
மாநிலக்கணக்காயர், சென்னை 18 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
அனைத்து கருவூல அலுவலர்கள்.

நகல்

நிதி (கல்வி II / BG) துறை, சென்னை 9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம்,சென்னை 9
மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை 9.
பள்ளிக்கல்வி (பட்ஜெட்) துறை,சென்னை 9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்